# நம்பிக்கைச் சுடர்

நம்பிக்கையால், நம்பிக்கையில் ஒளி வீச
சுடர் - பிப்ரவரி



## POPE FRANCIS

Calls FEB for Family

## புனித யூதா ததேயு திருக்கோயில்

வாணுவம்பேட்டை

## Holy Infant Day - 2016





## Thanks Giving - 2016 & New Year Celebration - 2017





## 17 Hours continuous Eucharistic Adoration





## பிப்ரவரி - 2017
## பங்குத் தந்தையின் இதயத்திலிருந்து



ஆண்டவரே, என் வழக்கின் நியாயத்தைக் கேட்டருளும்...உம் முன்னிலையினின்று எனக்கு நீதி கிடைக்கட்டும். (திருப்பாடல்கள் : 17:1-2)

இறை இயேசுவில் என் அன்பார்ந்த இறைச் சமூகத்திற்கு,

புதிய ஆண்டு - 2017 தொடங்கி ஒரு மாதம் நிறைவு பெற்றுள்ளது. இந்த ஆண்டின் வாக்குத்தத்தம் உன் எதிரிகள் அனைவரையும் நீ முழுமையாக வெற்றி கொள்வாய். உன் வழக்குகள் யாவும் முடிவடையும் என்பதற்கேற்ப என்னிடம் இரு சகோதரர்கள் சாட்சியாய் பகிர்ந்துக் கொண்டது. 10 பேர் கொண்ட வழக்கு நீண்ட ஆண்டுகளாய் இருந்த இழுபறி முடிவடைந்து வழக்கு சாதகமாக அமைந்தது என்று கூறினார். இன்னொருவர் ஆண்டவர் எங்களுக்கு நீதி வழங்கினார். வழக்கு, விசாரணை, தீர்ப்பு, எல்லாம் முடிந்து விட்டது என்று பெருமிதம் கொண்டார். நம்புவோம்! இந்த ஆண்டில் ஜல்லிக்கட்டு தமிழக வீர பண்பாட்டு விளையாட்டை குறித்த வழக்கும் விசராரணையும் தீர்ப்பும் வெற்றியாக சாதகமாக அமையும். இதற்காக வெயில், மழை, குளிர், பசி, தாகம், தூக்கம், வசதிகள் எல்லாம் துறந்து வீதிகளுக்கு வந்த இளையோரின் முன்னெடுப்புகள், பொது மக்களின் ஆர்வம் கலந்த ஒத்துழைப்பும், ஈடுபாடும், நல்ல உள்ளங்களின் உற்சாகமும், உதவியும் தமிழக சட்டப் பேரவையில் ஜல்லிக்கட்டுக்கான புதிய சட்ட மசோதாவை நிறைவேற்ற ஆவண செய்தது.

" இறைவா, நான் உம்மை நோக்கி கூப்பிடுகின்றேன். ஏனெனில், நீர் எனக்கு பதில் அளிப்பீர். என் பக்கம் உம் செவியைத் திருப்பியருளும்." (திருப்பாடல் 17:6)

பிரியமானவர்களே, இறைவன் நம் குரலுக்குச் செவிசாய்க்க வேண்டுமென்றால் சமூகத்தில், குடும்பத்தில் உள்ள நம் சகோதர சகோதரிகள் எழுப்புகின்ற அபாயக்குரலைக் கேட்போம், தேவையை சந்திப்போம். அப்பொழுது நம் குடும்பத்திலும், சமூகத்திலும் உறவுகள் உயிர் பெறும். பிப்ரவரி மாதம் திருக்குடும்பத்திற்கு அர்ப்பணிக்கப்பட்ட மாதமாக இருப்பதால் குடும்ப உறவுகளை கட்டியெழுப்புவதற்கு அதிகம் அதிகமாக ஆசைப்படுவோம். குடும்பம் என்பது கணவன், மனைவி, பிள்ளைகள், அத்தை, மாமா, தாத்தா, பாட்டி, அண்ணன், தம்பி, அக்கா, தங்கை என்று பலருடைய அன்புப் பிணைப்பு, அரவணைப்பு, மகிழ்ச்சி பொங்கி வழியும் திருக்கோவிலாக மாறுவதற்கு முயற்சி எடுக்க அன்போடு கேட்டுக் கொள்கிறேன். "*உறவுகள் நம் உயிர்கள்*"

ஜனவரி மாதம் புத்தாண்டு ஆசீர் வேண்டி 2017-ம் ஆண்டை அர்ப்பணித்து 17 மணி நேர தொடர் நற்கருணை ஆராதனை நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு செபிக்க உதவியவர்களுக்கும், பாடல் பாடி உற்சாகமூட்டியவர்களுக்கும் 17 மணி நேரத்தையும் இறைபிரசன்னத்தை உணர, அனுபவிக்க உதவிய இறை மக்களாகிய எல்லாருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். பொங்கல் திருப்பலி, விளையாட்டுப் போட்டிகள் சிறப்பாக கொண்டாட உதவிய நன்கொடையாளர்களுக்கும், தன்னார்வ அன்பு நெஞ்சங்களுக்கும் நன்றி. இம்மாதம் முழுவதும் குடும்பம் குடும்பமாக கூட்டாக செபியுங்கள். அப்போது ஒருவர் மற்றவர்களுக்கு எதிராக இருக்கின்ற வழக்குகளான புரிந்துக் கொள்ளாமை, வாக்குவாதங்கள், முறைபாடுகள், பிடிவாதங்கள் இன்னும் எதுவெல்லாம் குடும்ப அன்பை சீர்குலைக்கின்றனவோ, அவை எல்லாம் முடிவுக்கு வரும். கிறிஸ்து நமது குடும்பங்களின் தலைவராக, இப்பெரிய பங்கு குடும்பத்தின் ஆயராக இருப்பாராக. எனக்காகவும் செபியுங்கள்.


**அருட்பணி. மைக்கேல் சுரேஷ்**
புனித யூதா ததேயு திருயாத்திரைத்தலம்
வாணுவம்பேட்டை, சென்னை - 91.


**As in Judges 20:17, You will be a man of war to conquer in this year 2017.**

# குடும்பம் அன்பின் கோவிலாகட்டும்

குடும்பம் என்பது கணவன், மனைவி, பிள்ளைகளின் கூட்டு வாழ்வு. வாழ்வு என்பது "அன்பு" இருந்தால் மட்டுமே சாத்தியமாகும், இல்லையென்றால் அது போர்க்களமாகும். ஆக குடும்பத்தை அன்புப் பூங்காவாக மாற்ற வேண்டும் என்றால் அது கணவனுடைய பொறுப்பு மட்டும் கிடையாது. மனைவினுடைய பொறுப்பு மட்டும் கிடையாது. பிள்ளைகளின் பொறுப்பு மட்டும் கிடையாது. மாறாக குடும்ப உறுப்பினர்களின் ஒட்டு மொத்தக் கூட்டுப் பொறுப்பு, அது அன்பில் மலரும் உறவு.




நம்முடைய திருத்தந்தை பிரான்சிஸ் குடும்ப வாழ்வை இன்னும் அர்த்தமுள்ள விதத்தில் வாழ்ந்து, கிறிஸ்து என்னும் நற்செய்திக் குடும்பத்தில் அறிவிக்கப்பட்ட அன்பின் மகிழ்ச்சி (Amoris Laetitia) என்ற திருத்தூது ஊக்கவுரையை குடும்பங்களுக்காக எழுதி இருக்கின்றார். அந்த ஊக்கமடலில் ஐந்து விதமானக் காரணிகளை முதன்மைப்படுத்துகிறார்.

1. இறைவார்த்தையில் மகிழ்ச்சி
2. சவால்களை சந்திப்பதில் மகிழ்ச்சி
3. குடும்ப அழைத்தலில் மகிழ்ச்சி
4. இல்லற அன்பில் மகிழ்ச்சி
5. பலவீனச் சூழலில் மகிழ்ச்சி

இக்கடடுரையில் 'இல்லற அன்பில் மகிழ்ச்சி" என்ற தலைப்பில் நம் திருத்தந்தை கூறி இருப்பவற்றை கோடிட்டு காட்ட விரும்புகிறேன். தூய பவுல் கொரிந்தியருக்கு எழுதிய முதல் திருமடலில் அன்புப் பற்றி 13-ம் அதிகாரத்தில் வாசிக்கின்றோம்.

கணவன் மனைவியை அன்பு செய்வதில் பொறுமை என்பது சினம் கொள்ளத் தயங்குபவர் எனப்பொருள் (வி.ப 34:6, எண் 14:18) உணர்ச்சி வேகத்தில் செயல்படும் போது கோபமான வார்த்தைகள், உள்ளத்தை உடைக்கும்; காயப்படுத்தும். மீண்டும் உடைந்த கண்ணாடியை ஒட்டுப் போட முடியாது. என் கணவன், என் மனைவி நான் எதிர்பார்ப்பது போல இருக்க வேண்டும் பேச வேண்டும் என்ற மித மிஞ்சிய எதிர்பார்ப்பு . குறையில்லாதவர்களாக இருக்க வேண்டும் என்ற விருப்பம், எதிர்பார்ப்பும், விருப்பமும் நிறைவேறாத போது மனக்கசப்பு, சீற்றம், சினம், கூச்சல், பழிச்சொல் மிகுதியாககும். குடும்ப உறவுகள், உள்ளங்கள் உடையும். ஆகவே குடும்பத்தில் மகிழ்ச்சி வேண்டும் என்றால் பொறுமையாக இருக்க வேண்டும்.

**(குடும்ப) அன்பு நன்மை செய்யும்:**

பவுல் பயன்படுத்துகிற அடுத்த சொல் "கிரெஸ்தேயுத்தாய்" விலியியம் முழுவதிலும் இச்சொல் இங்கு மட்டுமே பயன்படுத்தப்படுகிறது. இச்சொல்லின் பொருள் நன்மைத்தனத்தை வெளிப்படுத்துபவர் என்பதாகும். "அன்பு செய்ய" என்ற வினைச்சொல்லின் அர்த்தம் "நன்மை செய்ய" என்பதாகும். புனித லொயோலா

இஞ்ஞாசியர் கூறுவதைப் போல் “அன்பானது வார்த்தைகளில் வெளிப்படுவதைவிடச் செயல்களில் அதிகமாக வெளிப்படுத்தப்பட வேண்டும்.” குடும்ப மகிழ்ச்சிக்காக பிரதிபலனை எதிர்பார்க்காமல் அன்பைக் கொடுப்பது, எல்லையில்லாமல் கணவன்-மனைவிக்கும், மனைவி -கணவனுக்கும், பெற்றோர்- பிள்ளைகளுக்கும், பிள்ளைகள் - பெற்றோருக்கும் அன்பைக் கொடுப்பதே நன்மை செய்யும்.

***(குடும்ப) அன்பு பொறாமைப்படாது:***

“ஜெலோயி” என்னும் வினைச்சொல் குறித்துக் காட்டுவது அழுக்காறு அல்லது பொறாமை கொள்ளுதல், இது அன்புக்கு எதிரானது மகிழ்ச்சியை குலைக்கும். பொறாமை என்பது அடுத்தவரது வளமையைக் கண்டு நமக்குள் எழுப்புகின்ற ஒருவகை வேதனை, துயரம் ஆகும். பொறாமை குடும்ப மகிழ்ச்சியைக் கெடுக்கும், வளர்ச்சியைத் தடை செய்யும். ஆகவே குடும்பத்தில் ஒருவர் இன்னொருவர் திறமையில், உயர்வில், வளர்ச்சியில், மகிழும் போது குடும்பம் முன்னேறும். ஒருவர் இன்னொருவர் தனித்துவத்தைக் கண்டு அதில் வளர ஊக்குவிக்கும் போது போட்டி, பொறாமை, பகைமை என்னும் பகைவர்கள் விரட்டி அடிக்கப்படுவார்கள்.

***அன்பு தற்புகழ்ச்சி கொள்ளாது:***

“பெர்ப்பெரயுத்தாய்” என்ற வார்த்தை வீண் கர்வத்தையும், ஆணவத்தையும் குறிக்கும். தங்களைப் பற்றி தாங்களே தம்பட்டம் அடித்துக் கொள்ளும் மனநிலையை விட்டுவிட்டு குடும்பத்தில் அடுத்தவர்களை மையப்படுத்த வேண்டும். தற்புகழ்ச்சியும், வீண்பெருமையும் “நான்” என்கிற இறுபாப்பும் மறைந்து தாழ்ச்சி உண்டானால் குடும்பத்தில் மகிழ்ச்சி தழைக்கும். ஒருவர் மற்றவரை குடும்பத்தில் அடக்க ஆள முயலும் போது சண்டை, சச்சரவு அதிகமாகும். அதனால் தான் இயேசு நம் குடும்பத்தில் உங்களுள் முதன்மையானவராக இருக்க விரும்புகின்றவர் உங்களுக்குப் பணியாளராக இருக்கட்டும். (மத் 20:27) புனித பேதுருவின் வார்த்தையில் ஒருவர் மற்றவரோடு பழகும்போது, பேசும்போது எல்லாரும் மனத்தாழ்மையை ஆடையாய் அணிந்திருங்கள். ஏனெனில் “செருக்குற்றோரைக் கடவுள் இகழ்ச்சியுடன் நோக்குவார், தாழ்நிலையில் உள்ளவர்களுக்கோ கருணைக் காட்டுவார்.” (1 பேதுரு 5:5)

இன்னும் அன்பைப் பற்றி விளக்கும் போது தூய பவுலின் கூற்றுப்படி அன்பு இறுமாப்பு அடையாது, அன்பு தாரள மடைமுடையது. அன்பு எரிச்சலுக்கு இடம் கொடாது. அன்பு எப்பொழுதும் மன்னிக்கும் என்று விளக்கிக் கொண்டே போகலாம். அதை வாழ்ந்துக் காட்டவே அழைக்கப்படுகின்றோம்.

இல்லற அன்புறவுத் திருமணம் என்னும் மதிப்புயர்ந்த அருள் அடையாளத்தினால் ஆசீர் பெறுகிறது. “ஓர் ஆணும் ஒரு பெண்ணும் திருமணம் எனும் அருளடையாளத்தைக் கொண்டாடுகிற போது ஒரு வகையில் கடவுள் அவர்களில், பிரதிபலிக்கப்படுகின்றார். தம் பண்பு கூறுகளையும் மேலும் தமது அன்பின் அழியாத முத்திரையையும் அவர்களில் பதிக்கின்றார். திருமணம் கடவுள் நம்மீது கொண்டுள்ள அன்பின் உருவகக் குறியீடாக இருக்கிறது. உண்மையில் கடவுளும் ஒரு கூட்டுறவாகவே இருக்கின்றார். தந்தை, மகன், தூய ஆவி ஆகிய மூன்று ஆட்களும் நிறைவான ஒன்றிப்பில் என்றும் நிலைத்துள்ளனர். இதுவே துல்லியமாக திருமணத்தின், குடும்ப வாழ்வின் மறைபொருள் ஆகும். இரு மனத்துணைவர்களைக் கொண்டு ஒரே ஒரு இருப்பைக் கடவுள் உருவாக்குகிறார். இது கிறிஸ்துவுக்கும் திருச்சபைக்கும் உள்ள உறவைக் குறிக்கும். அன்பு இல்லற வாழ்வின் மையமாகும் போது குடும்பத்தில் மகிழ்ச்சி என்றென்றும் நிறைந்திருக்கும். அன்பின் மகிழ்ச்சி என்ற இவை நம்முடைய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் ஊக்க மடலிலிருந்து எடுக்கப்பட்டக் கட்டுரையாகும்.

# புனித அருளானந்தர்
## இயேசு சபை மறைசாட்சி கி.பி.1693

இவர் போர்ச்சுக்கல் நாட்டின் லிஸ்பன் நகரில் உயர் குலத்தில் தோன்றியவர். சிறுவயதிலேயே தந்தையை இழந்தார். இவரும் இவர் தம் இரு சகோதரர்களும் அரசவையில் உள்ள குழந்தைகளுடன் விளையாடும் அளவுக்கு அவர்களின் குலப்பெருமை விளங்கியது. சிறுவன் ஜான் தொடக்கத்திலிருந்தே உடல் நிலையில் ஏற்றத்தாழ்வு அடைந்து வந்தார்.



11 வயதில் உயிர் பிரிந்துவிடும் என அஞ்சும் அளவிற்கு நோய் தாக்கியது. தாய் புனித பிரான்சிஸ் சவேரியாரை நோக்கித் தன பிள்ளைக்குக் குணம் பெற்றுத் தரவேண்டும் என்று மன்றாடினார். புதுமையாக ஜான் பிழைத்துக் கொண்டார். பின்னர் 1662 -ல் இவர் இயேசு சபையில் சேர்ந்தார். குருப்பட்டம் பெற்றபின் இந்தியாவுக்குக் கிறிஸ்துவின் ஒளியைக் கொண்டு வந்தார். முதலில் கோவாவில் தங்கி இறுதிப் படிப்புகளை முடித்துக் கொண்டார். பிறகு மதுரை மறைபரப்புத் தளத்திற்கு வந்தார். தமிழைத் திறம்படக் கற்றுக் கொண்டார். இன்று போற்றப்படுகின்ற "தாயகமாக்குதல்", "பண்பாட்டு மயமாக்குதல்" என்ற முறைகளை, ஏறத்தாழ மூன்று நூற்றாண்டுகளுக்கு முன்பே, எவரின் தூண்டுதலும் இல்லாமலேயே, செயல்படுத்தினார். இதனால், இயேசு சபை மாநிலத் தலைவர்கள் உட்பட பலரும் வெகுண்டு எழுந்தனர். மீண்டும் இவரை இத்தாலிக்கு அனுப்பிவிடவும் எண்ணினர். இவரோ இந்தியத் துறவி போல் காவி உடை அணிந்து, இந்தியனாகவே வாழ்ந்து, தமிழக மக்களின் அன்பையும், வணக்கத்தையும் பெற்றார். இதன் வழியாக ஆயிரக்கணக்கானவர்கள் மெய்மறையைத் தழுவினர்.

இராமநாதபுரத்தில் மறவர் குலத்தைச் சேர்ந்த அரசு குடும்பத்தினர்கள் கூட இவரால் மெய்மறையில் சேர்க்கப்பட்டனர். இதன் பொருட்டே இவர் உயிர் துறக்க வேண்டியதாயிற்று. ஆனால் இவரது கடைசி நாட்களில் இவர் புதுமை வரமும் பெற்றிருந்தார். இவரது செபத்தின் பயனாகக் கொடிய நோயுற்றோர் பலரும் புதுமையாக நலம் பெற்றனர். இதைப் பார்த்த அந்தணர்கள் இவர் பேய் வித்தையின் காரணமாகக் குணப்படுத்துகிறார் என்று குற்றஞ்சாட்டினார்கள். மன்னர் தடியத்தேவர் சாகக் கிடந்த வேளையில் அருளானந்தரின் செபத்தினால் நலமடைந்து திருமுழுக்குப் பெற்றார். இந்த சிற்றரசனுக்கு ஐந்து மனைவிகள் இருந்தனர். இவர் மெய்மறையைத் தழுவும்போது முதல் மனைவியை மட்டும் வைத்துக்கொண்டு மற்றவர்களை அனுப்பிவிட்டார். இதனால் ஆத்திரமடைந்த கலை என்பவர் இரகுநாதன் (என்ற மற்றொரு சிற்றரசர் இவளுக்கு நெருங்கிய உறவினர்), ஓரியூரிலிருந்த தன் தம்பி உடையத்தேவரிடம் சுவாமி அருளானந்தரைப் பற்றிய குற்றச்சாட்டை கவனிக்கக் கேட்டுக் கொண்டான். இந்த உடையத் தேவரின் ஆணைப்படி கி.பி. 1693ஆம் ஆண்டு செப்டம்பர் 4ம் நாள் ஒரு மணல் மேட்டில் புனிதர் தலை வெட்டப்பப்பட்டு விண்ணகம் சென்றார்.

***சிந்தனைக்கு:***

"எல்லா வகையிலும் வேதனையுறுகிறோம். ஆனால் ஒடுங்கிப் போவதில்லை. மனக்கலக்கம் அடைகிறோம். ஆனால் மனம் உடைவதில்லை. துன்புறுத்தப்படுகிறோம். ஆயினும் இறைவனால் கைவிடப்படுவதில்லை. வீழ்த்தப்படுகிறோம். ஆனால் அழிவுறுவது இல்லை. போகுமிடமெல்லாம் இயேசுவின் மரணப்பாடுகளைத் தாங்கிச் செல்கிறோம்" . (2கொரி 4: 8-10)

---

**As in Deut. 20:17, You will utterly destroy your enemies in the year 2017**

# விவிலிய வினா - 4

## விடுதலைப் பயணம் (அதிகாரம் 21 முதல் 40 வரை)

1. கூர் என்பவரின் மகன்..........................
2. இஸ்ரயேல் மக்கள் ...................மலையைவிட்டுப் புறப்பட்டபின் தங்கள் அணிகலன்களை அணியவே இல்லை.
3. ......................சாகடிப்பவர் எவரும் கொல்லப்படவேண்டும்.
4. ஆறு நாட்கள் நீ உன் வேலையைச் செய்வாய்..............நாளிலோ ஓய்ந்திருப்பாய்.
5. ..................என்றுமுள்ள நியமமாக அவர்களோடு இருக்கும்.
6. கடவுளை நீ பழிக்காதே. உன் மக்களின் தலைவனைச் சபிக்காதே. அதிகாரம் மற்றும் வசனம் குறிப்பிடுக.
7. ஒரு செக்கேல் என்பது...............கிராம். ஒரு கேரா என்பது..................கிராம்.
8. அஞ்சாதீர்கள் கடவுள் மீது உங்களுக்கு ஏற்படும் அச்சத்தால் நீங்கள் பாவம் செய்யாதிருப்பீர்களா என்று உங்களை சோதித்தறியவே அவர் இவ்வாறு தோன்றினார். யார்? யாரிடம் கூறியது?
9. ஆண்டவரின் மாட்சி..................மலைமேல் தங்கிற்று.
10. ஒரு எபிரேய அடிமை எத்தனை ஆண்டுகள் அடிமைவேலையை செய்வான்?
11. கடவுளின் திருவுளத்தை அறிவதற்குக் குருக்கள் பயன்படுத்தும் இரு பொருட்கள் எது?
12. ஆண்டவர் மோசேயிடம் எந்த மாதத்தில், எந்தநாள் சந்திப்புக் கூடாரத்தின் திருஉறைவிடத்தை நீ எழுப்புவாய் என்று கூறினார்?
13. ஒருவன் தன் நண்பனிடம் பேசுவதுபோலவே.................முகமுகமாய் ............பேசுவார்.
14. ஆணோபெண்ணோ யாராயினும் இனிமேல் தூயகத்துக்காகக் காணிக்கை கொண்டுவரவேண்டாம் என்று கட்டளையிட்டது யார்?
15. நீ என் பின்புறத்தைக் காண்பாய். என்............காணமாட்டாய் என்றார்.
16. விடுதலைப் பயணம் 21:17 இவ்வசனம். நற்செய்தி நூலில் எங்கு இடம் பெற்றுள்ளது? அதிகாரம், வசனம் குறிப்பிடுக.
17. உன்னைச் சார்த்துள்ள எளியவரின் வழக்கில் ............திரித்து விடாதே.
18. உடன்படிக்கையின் ஏட்டை எடுத்து மக்கள் காதுகளில் கேட்கும்படி வாசித்தது யார்?
19. அகிமாக்கின் எந்த குலத்தைச் சார்ந்தவன்?
20. எங்கள் கொடுமையையும், எங்கள் பாவத்தையும் மன்னித்து எங்களை உம்................சொத்தாக்கிக் கொள்ளும்.

## பதில் அனுப்ப வேண்டிய கடைசி நாள்: 15.02.2017

**As in Genesis 20:17, Abraham prayed and God healed Abimelech....**
**You will receive Divine healing in 2017.**

## சென்ற மாத கேள்விக்கான விடைகள்

| நவம்பர் | டிசம்பர் |
|---|---|
| **தொடக்கநூல் (1-25)** | **தொடக்கநூல் (26-50)** |
| 1. நாசிகளில் (2:7) | 1. கானான் (37:1) |
| 2. பாம்பு (3:1) | 2. லாபான் (29:22) |
| 3. கானான் (9:25) | 3. சிமியோனைப் (42:24) |
| 4. ஆறுதல் (5:29) | 4. நூறுமடங்கு (26:12) |
| 5. எகிப்தைச், எகிப்தியர் (12:14) | 5. தூதாயிம் (30:14) |
| 6. பேழை (6:14) | 6. காவற்கிடங்கில் (40:15) |
| 7. எமோரியர் (15:16) | 7. லூசு (28:19) |
| 8. எட்டாம் (21:4) | 8. இத்தியப் (27:46) |
| 9. அவிலாவுக்கும் (25:18) | 9. ஏழாண்டுகள் (41:53) |
| 10. திருமுன்னை (4:16) | 10. அரசுரிமை (49:10) |
| 11. அறுநூற்றொன்று (8:13) | 11. பொறுப்பாளி (43:6) |
| 12. உரிமையாக்கிக் (22:17) | 12. ஏசா (27:34) |
| 13. வாக்குறுதியினின்று (24:8) | 13. கலப்பு (30:32) |
| 14. மக்பேலா (23:19) | 14. சேயிர் (36:8) |
| 15. உறவினருக்கு (16:12) | 15. பெத்தேலின் (35:8) |
| 16. இஸ்மயேலைப் (17:20) | 16. வலிமையுடன் (31:6) |
| 17. பொதுவிடத்தில் (19:2) | 17. தயை (34:11) |
| 18. கண்டனக்குரலின்படி (18:21) | 18. கனிவுடன் (50:25) |
| 19. பெண்ணை (20:7) | 19. இளைஞனின் (44:32) |
| 20. தரையில் (7:22) | 20. சிறந்தவை (45:20) |

**As in Numbers 20:17, You will pass through your enemies to your promised land in 2017.**

## நித்திய இளைப்பாற்றி தந்தருளும்



**ஜெயமேரி அந்தோணி**

**மண்ணில்** 15.08.1926 **விண்ணில்** 20.01.2017

நான் நல்லதொரு போராட்டத்தில் ஈடுபட்டேன். என் ஓட்டத்தை முடித்து விட்டேன். விசுவாசத்தைக் காத்துக் கொண்டேன். நேரிய வாழ்வுக்கான வெற்றி வாகையை இறுதி நாளில் ஆண்டவர் எனக்குத் தருவார்.

**2 திமொத்தேயு 4: 7 -8**



பிரிவால் வாடும் குடும்பத்தார்க்கு
எங்களின் ஆழ்ந்த இரங்கலும் மற்றும் ஜெபங்களும்.

# Youth Seminar

"All Praise and Glory to our Lord Jesus Christ". On Nov 13th 2016, Youth Seminar was conducted by Fr.Lawrence who had come all the way from Anugraha ,Dindigul. This was his second session for all youth of our parish.

This program was very much useful for all youth who are facing uphill challenges in this modern world. The Initial program was designed with three thoughts .i.e

a) How to focus on ourselves ?
b) How our perspective should be with others?
c) How our attitude should be towards God?

These points were given a deep understanding about how to have an Godly Attitude. This helps our Youth to be more courageous and have given strong belief that they can do anything through our Lord Jesus Christ who strengths .The entire program was enriched by action songs and motivational video clips.

The Second program was about handling Emotions.

**a) What is fear? b)What is anger? c) What is happiness? d) What is sadness ?**

This emotion handling session was to understand about the sources of fear, anger,happiness & sadness. Besides there are more points for practicing to be happy like

1) Smile 2)Phototherapy 3)Green colour 4)Body massage
5)Accupressure 6)Exercise 7)Food 8)Music and dance
9)Child play 10)Drink Love Tonic 11)Service & 12)Faith in God have been taught





.

This helps the youth to start understanding their emotions and they can practice above points to be happy in their life to overcome any type of challenges easily with faith in God. Rev. Fr.Lawrence had made this seminar in an extremely benefit way for all of our Parish youth. There is no doubt that all our youth, participated in this seminar have benefitted a lot and are having a newly profound strong desires in their minds to do all the challenging situation into a victory one in their life.

During seminars Lunch and Snacks were provided to all participants. The overall arrangements were made by our beloved Parish Priest Rev. Fr.Michael Suresh to enrich our Parish youth to identify & develop their skills in a Godly way. We thank our Parish Priest for this wonderful initiative.

---

**As in John 20:17, our God, the God Almighty will be your Father and your God.**

| தீர்மானம் | செயல்திட்டங்கள்-திருவழிபாடு | பொறுப்பு | காலம் |
|---|---|---|---|
| 15,16,17,18, 19 திருப்பலியின் தனித் தன்மையும், அடிப்படைப் புரிதலும், அமைப்பும் | **திருப்பலி**<br>திருப்பலியின் மேன்மை, ஆழ்பொருள் உணர்ந்து அனைவரும் இணைந்துப் பங்கேற்கும் வகையில் தகுந்தப் பயிற்சிகள், முயற்சிகள் மேற்கொள்ளல் வேண்டும்.<br>அமைதியான செபச் சூழலில் சிறிது நேரம் செலவிட்டு ஒருநிலைப்படுத்தப்பட்ட மனநிலையில் திருப்பலியைத் தொடங்கி இடையில் வேறெந்தச் சேர்க்கையுமின்றி முழுமையாக கொண்டாட வேண்டும்.<br>தவிர்க்க முடியாதக் கட்டங்களில் நற்கருணை ஆராதனையும், வழக்கமான நவநாள் மற்றும் புனிதர்களை நோக்கியச் செபங்களும் முன்பே முடிக்கப்பட வேண்டும் . திருப்பலி இல்லாத வேறொரு நாளில் நற்கருணை ஆராதனையை நடத்த ஊக்குவிக்க வேண்டும்.<br>திருத்தூயகம் சற்று உயர்ந்தத் தளத்தில் போதுமான விசாலத்துடன் அமைந்திருக்க வேண்டும். ஒரே ஒரு திருச்சிலுவை மட்டுமே மக்கள் பார்வையில் அமைந்திருக்க வேண்டும். வேறு சிலுவையிருந்தால், பீடத்தின் மீது இன்னொரு சிலுவைத் தேவையில்லை.<br>நற்கருணைப் பீடம் புடவைகளால் சுற்றப்படாமல், பூக்களைச் சுமக்காமல், பலி மேடை, திருவுணவு மேசை என்ற குறியை எடுத்தியம்புவதாகவும், குறிக்கப்பட்ட வழிபாட்டுக் காலத்தையும் அன்றைய நாளின் வழிபாட்டுச் சிறப்பையும் எடுத்தியம்புவதாகவும் எளிய துணி அலங்காரம் செய்யப்பட வேண்டும்.<br>மெழுகுத்திரித் தாங்கிகளைப் பீடத்தின்மீதோ, அருகிலோ வைக்க வேண்டும். | மறைமாவட்ட திருவழிப்பாட்டு பணிக்குழு, பங்கு வழிப்பாட்டுக்குழு, பங்கு அருட்பணியாளர் | தொடர் செயல்பாடு |
| 24 திருஉடை மற்றும் திருப்பணி நெறிமுறை | அருட்பணியாளர்கள் தோள்துகிலும் (Stole) திருப்பலி திருவுடையும் (Chausible) அணிந்தவர்களாய் திருப்பலி ஒப்புக் கொடுக்க வேண்டும். மிகுதியான எண்ணிக்கையில் அருட்பணியாளர்கள் கூட்டுத் திருப்பலியில் கலந்துக் கொள்ளும்போது, போதுமானத் திருப்பலி திருவுடையில்லாத நிலையில், தோள்துகில் மட்டுமே அணிந்துக் கொள்ளலாம். வெள்ளை அங்கியோ, துறவற | மறைமாவட்ட திருவழிப்பாட்டு பணிக்குழு, பங்கு அருட்பணியாளர், இறை அழைத்தல் பணிக்குழு | உடனடி செயல்பாடு |

| | | | |
|---|---|---|---|
| | அங்கியோ இல்லாமல் சாதாரண உடைமேல் தோள்துகில் அணிதல் ஏற்புடையதல்ல. எப்போதும் சாதாரண உடையின் மீது ஆல்பு என்ற நீண்ட வெள்ளை உடை அணிந்து திருப்பலியில் இணைவதை வழக்கமானதாக்கிக் கொள்ளக் கூடாது.<br>பங்கேற்க வரும் இறைமக்களும் தகுந்த உடை ஒழுக்கத்துடன் ஆலயம் வர வேண்டும்.<br>திருத்தொண்டர்கள் தங்கள் வெள்ளை அங்கிக்கு தேல் ஆல்ப் அல்லது சர்ப்பிளிஸ் என்ற திருவுடைகள் அணிந்து தோள்துகில் பக்கவாட்டத்தில் அணிய வேண்டும். கூட்டுத்திருப்பலி நிறைவேற்றும் அருட்பணியாளர்கள் நிற்கும்போது, அருட்பணியாளர் வரிசைக்குப் பின்புறம் திருத்தொண்டர் நிற்க வேண்டும்.<br>காணிக்கைப் பொருள்கள் தயார் செய்யவும், இவர் வழியாக பாடும்போதும், சமாதான வாழ்த்துக்கு அழைப்புத் தரும்போதும், சென்று வாருங்கள் விடுப்புத்தரும்போதும் திருத்தொண்டர் முன்வரவேண்டும்.<br>எழுந்தேற்றத்தின்போது திருத்தூயகத்தில் திருப்பணி புரியும் திருத்தொண்டர்கள் முழுந்தாள்படியிட வேண்டும்.<br>திருத்தொண்டர் நிலையடையாத குருமாணவர்கள் திருப்பலியில் உதவும்போது அருட்பணியாளர்களுக்கு இணையாகத் தூயகத்தில் நிற்பதும் அமர்வதும் கூடாது. திருப்பணிக்கு வரும்போது அவர்கள் சர்ப்பிளிஸ் அணிந்திருக்க வேண்டும். மக்களை ஆசீர்வதிப்பதற்கும், தீர்த்தம் தெளிப்பதற்கும் நற்கருணைப் பேழையைத் திறக்கவும் மூடவும் அவர்களுக்கு அனுமதியில்லை. | | |
| திருப்பலிக் கொண்டாட்டம் | மூன்று இடங்கள் தனிமைப்படுத்தப்பட்டு முக்கியப்படுத்தபட வேண்டும். தலைமை அருட்பணியாளரின் இருக்கை, வார்த்தை வழிபாட்டு மேடை, நற்கருணை வழிபாட்டுப் பீடம். | மறைமாவட்ட திருவழிப்பாட்டு பணிக்குழு, | உடனடி செயல்பாடு |
| வருகை | வருகைப் பவனியில் வாசகர் பணிச் செய்பவர்களும், ஏனையத் திருப்பணிச் செய்பவர்களும் இணைவார்கள்.<br>தலைமை அருட்பணியாளர் திருப்பீடத்தை வணங்கி முத்தம் செய்வார். தூபம் இருப்பின் சாம்பிராணியை அதிலிட்டு அமைதியில் அதை ஆசிர்வதிப்பார். திருத்தொண்டர் இல்லாவிட்டால் அவர் மட்டுமே திருப்பீடத்தை சுற்றித் தூபம் காட்டி வருவார். | பங்கு வழிப்பாட்டுக்குழு, பங்கு அருட்பணியாளர் | |

| | | | |
|---|---|---|---|
| | தலைமை அருட்பணியாளர் தனது இருக்கை மேடையிலிருந்தே திருப்பலியைத் தொடங்குவார். நிறைவு செய்வார்.<br>திருப்பலித் தொடங்கியப்பின் அருட்பணியாளர்கள் கூட்டுத் திருப்பலியில் இணையவே கூடாது.<br>சிலுவை அடையாளம் வரையுமுன்பே திருப்பலிக் கருத்துக்கள் அறிவிக்கப்பட வேண்டும். திருப்பலி முன்னுரை வாசிக்கப்பட வேண்டும். எழுதித் தயார் செய்யப்படும் முன்னுரை 10 வரிகளுக்கு மிகாமல் திருப்பலி மையக்கருத்தை வலியுறுத்துவதாக அமைய வேண்டும்.<br>சிலுவை அடையாளத்திற்குப்பின், காலை, மாலை வணக்கங்கள் சொல்வதைத் தவிர்த்து, கொடுக்கப்பட்டுள்ள திருஅவைக்குரிய விவிலிய வரிகள் ஏதேனும் ஒன்றைப் பயன்படுத்தி இறைமக்களை வாழ்த்த வேண்டும். | | |
| மன்னிப்பு வழிபாடு | பொது மன்னிப்பு மன்றாட்டை பயன்படுத்தும்போது, (மூன்று முறை) மார்பில் அறைந்துக்கொள்வதன் அடையாளத்தையும், உருக்கத்தையும் குறைக்கக் கூடாது.<br>பொது மன்னிப்பு மன்றாட்டுக்குப் பதிலாக குறும்பாடல் (பஜன்) பாடலாம்.<br>திருப்பலியின் தொடக்கத்தில், பாவ மன்னிப்பு வழிபாட்டு இடத்தில் தண்ணீர் மந்தரித்துத் தெளிக்கும் சடங்கு தவக்காலம் அல்லாத மற்ற ஞாயிற்றுக்கிழமைகளுக்கும், அதிலும் சிறப்பாகப் பாஸ்கா காலத்தின் ஞாயிற்றுக்கிழமைகளுக்கு மிகவும் பொருத்தமானது. அதற்குரிய பாடலும் இடம்பெற வேண்டும்.<br>மன்னிப்பு வழிபாடு வெறுமனே திருப்பலிக்கான உடனடி தயாரிப்புச் சடங்கு மட்டுமே என்பதால், அதன் நிறைவில் அருட்பணியாளர் ஒப்புரவு அருள்அடையாளத் தோரணையில் கைகளை உயர்த்திப் பாவ மன்னிப்பு வழங்குவதைத் தவிர்க்க வேண்டும் | | |
| சபை மன்றாட்டு | செபிப்போமாக / மன்றாடுவோமாக என்னும் தலைமை அருட்பணியாளரின் அழைப்புக்குப் பின் திருக்கூட்டத்தின் விண்ணப்பங்களைக் கூட்டிக்குவிக்கும் தெளிவான குறுகிய அமைதி அனுசரிக்கப்பட வேண்டும். | | |

| | | | |
|---|---|---|---|
| வார்த்தை வழிபாடு | வார்த்தை மேடையிலிருந்து வாசகங்கள், பதிலுரைப்பாடல், நற்செய்தி, மறையுரை, பொது மன்றாட்டுகள், பாஸ்கா அறிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.<br>விளக்கவுரைகளுக்கும், அறிவிப்புகளுக்கும் வேறொரு தனியான அமைப்பைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். | | |
| வாசகங்கள் | மறைவட்ட அளவில், பங்குகளின் வாசகர்களுக்கென்று ஒருதனிக்குழு அமைத்துப் பயிற்சி வழங்க வேண்டும்.<br>அவர்களுடைய சிறப்புப் பணியை அடையாளப்படுத்தும் சிறுவுடை மறைமாவட்ட அளவில் வரைவு செய்யப்பட வேண்டும்<br>திருப்பலியின் வருகை பவனியிலே வாசகப் புத்தகம் எடுத்துச் செல்லப்டுவதில்லை. ஆனால் வாசக மேடையில் வைக்கப்பட்டிருக்கும்.<br>வார்த்தை வழிபாட்டின் துவக்கத்தில் திருவிவிலியம் பவனியாக எடுத்துச் செல்லப்படுவதில்லை. தனி செப-விவிலிய வழிபாடுகளில் அத்தகைய சடங்குகளை மேற்கொள்ளலாம்.<br>வாசகப் புத்தகத்திலிருந்து மட்டுமே இறைவார்த்தை அறிவிக்கப்படவேண்டும். திருவிவிலியம் குறிப்பாக, பைபிள் டைரி, ஞாயிறு மலர்கள், வாரப் பிரசுரங்கள் பயன்பாடு அறவேத் தவிர்க்கப்படவேண்டும்.<br>'முதல்வாசகம்' 'இரண்டாம் வாசகம்' என்று அறிவிக்கப்படுவதில்லை. வாசகப் புத்தகத்தில் வாசகத்திற்கு முன் கொடுக்கப்பட்டுள்ள சிறு வசனப்பகுதி வாசகத்தின் சுருக்கத்தை உணர்த்துவதற்கே என்பதால், அதை வாசிப்பதில்லை. இறைவார்த்தையின் அதிகாரம் வசனங்களின் எண்கள் அறிவிக்கப்படுவதில்லை.<br>வார்த்தை வழிபாட்டில் இறைவார்த்தை 'அறிவிக்கப்படுவதும்' அதை மக்கள் முழு ஆளாக 'செவிமடுத்துக் கேட்பதும்' என்ற இருவழிச் செயல் நடைபெறுவதால், அறிவிப்புத்தன்மைக்கு முக்கியத்துவம் தரப்பட வேண்டும். வாசகங்களின்போது அமர்ந்து இணைந்துச் செவிசாய்ப்பதும் நற்செய்தியின்போது நற்செய்தி அறிவிப்பு மேடைப்பக்கமாகத் திரும்பி நிற்றலும் வார்த்தை வழிபாட்டுக்குகந்த ஒரு கூட்டுச் குழுச் செயல் என்பது தெளிவுபடுத்தப்பட வேண்டும். | | |
| 33. பதிலுரைப் பாடல் | அனைத்து திருப்பலியிலும் அந்நாளுக்கான அல்லது திருமணம் நல்லடக்கம் போன்ற திருப்பலியில் அத்தருணத்திற்காகக் கொடுக்கப்பட்டுள்ளத் திருப்பாடலை மட்டுமே பதிலுரைப்பாணியில் செபமாகவோ, பாடலாகவோப் பயன்படுத்த வேண்டும். வேறு பாடல் எதுவுமே அவ்வமையம் பாடக்கூடாது. | அருட்பணியாளர், பங்குப் பாடகர் குழு | உடனடிச் செயல்பாடு |

| | | | |
|---|---|---|---|
| அல்லேலூயா | வாசக மேடை நோக்கிய நற்செய்தி பவனிக்கு உடன் பாடப்படுவதுதான் அல்லேலூயா என்னும் ஆர்ப்பரிப்பு. எனவே அதைப் பாடவில்லையென்றால் அதனை விட்டுவிடலாம். | | |
| நற்செய்தி அறிவிப்பு | பீடத்திலிருந்து நற்செய்தி வாசிக்கப்படக்கூடாது. வாசக மேடை மட்டுமே பயன்படுத்த வேண்டும்.<br>திருப்பலியில், குறிப்பாக ஞாயிறு மற்றும் பெருவிழாக்களில், நற்செய்தி அறிவிக்கப்பட பயன்படுத்தப்படும் 'நற்செய்தி புத்தகம்' மட்டுமே கிறிஸ்துவைப் பிரதிபலிப்பதால், வணக்கத்திற்குரியதாகக் கருதப்படும். அதுமட்டுமே வருகைப் பவனியிலே எடுத்துவரப்பட்டு, பீடத்தின் மீது வைக்கப்பட்டு, மீண்டும் நற்செய்திப் பவனியின் போது எரியும் திரிகளுடன் எடுத்துச் செல்லப்படும். இந்தியாவில் இப்புத்தகம் இன்னும் தயாரிக்கப்படாததால், இச்சடங்குகள் பின்பற்றப்படுவதில்லை. வெறுமனே வாசகப் புத்தகத்திலிருந்து வாசகங்கள் வாசிக்கப்படவேண்டும்.<br>கூட்டுத் திருப்பலியில் திருத்தொண்டர் இல்லாதத் தருணத்தில் கூட்டுத்திருப்பலியில் இணைந்துள்ள அருட்பணியாளர்களுள் ஒருவர் நற்செய்தி வாசிப்பார்.<br>அறிமுகப்படுத்த வாழ்த்தும்போது, அருள்பணியாளரோ, திருத்தொண்டரோ கரங்களை விரிப்பதில்லை.<br>சிறுவர் திருப்பலியில்கூட, நற்செய்தி நடித்துக் காட்டி அறிவிக்கப்படக்கூடாது.<br>நற்செய்தி அறிவிப்புக்குப்பின் வாசகப் புத்தகத்தை உயர்த்திக் காட்டுதல் தவிர்க்கப்பட வேண்டும். இது அறிவிக்கப்படும் புத்தகமே அன்றி அடையாளப்படுத்தப்படும் புத்தகமல்ல.<br>ஆயர் தலைமைத் தாங்கும் திருப்பலியில் திருத்தொண்டர் உதவிச்செய்தால் மட்டுமே வாசித்த நற்செய்திப் புத்தகத்தை ஆயர் முத்திச் செய்ய அவர் எடுத்துச் செல்வார். இல்லாவிடில், அருட்பணியாளரே முத்தி செய்து வணக்கம் செய்து விடுவார். | மறைமாவட்ட திருவழிப்பாட்டுப் பணிக்குழு, பங்கு வழிப்பாட்டுக்குழு, பங்கு அருட்பணியாளர் | |
| 36,74 மறையுரை | மறையுரை மக்களின் தேடல்களுக்கு விடையளிக்கும் வகையிலும் நம்பிக்கை வாழ்வுக்கு ஊக்கமளிக்கும் வகையிலும் முன்தயாரிப்புச் செய்தல் வேண்டும். வழிப்பாட்டையும் வாழ்வையும் இணைக்கும் அருமையான பாலம் மறையுரை.<br>மறையுரைகளிவ் திருவிவிலியத்தை சார்ந்த மேற்கோள்களை வழங்க வேண்டும்.<br>மறையுரை வாசக மேடையிலிருந்துதான் வழங்கப்பட வேண்டும். பீடத்திலிருந்து மறையுரை வழங்கப்படக் கூடாது. மிக நீண்ட மறையுரைகள் தவிர்க்கப்படவேண்டும்.<br>மறையுரை திருப்பலியின், குறிப்பாக வார்த்தை வழிபாட்டின் தொடர் நிகழ்வாக இருப்பதால், சிலுவை அடையாளத்துடன் தொடங்குவதும் 'ஆமென்' என்று சொல்லி முடிப்பதும் தவிர்க்கப்பட வேண்டும். | பங்கு அருட்பணியாளர் | தொடர் செயல்பாடு |

தொடரும்

## இம்மாத சிறப்பு நிகழ்வுகள்

02.02.2017 ஆண்டவரை காணிக்கையாக அர்ப்பணித்தல் - விழா
(Jesus Offering Feast)
முதல் வியாழன் - நம்பிக்கை வியாழன் (Hope ful Thursday)
பகல்: 11.30 மணிக்கு நவநாள் செபம், குணமளிக்கும் நற்கருணை வழிபாடு, திருப்பலி, பகல் உணவு.
மாலை 6.30 மணிக்கு நவநாள் செபம், தேர்பவனி (மெழுகுதிரி பவனி) நற்கருணை ஆசீர், திருப்பலி,
1 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கான சிறப்பு ஆசீர்வாதம்

19.02.2017 10 மற்றும் 12ஆம் வகுப்பு மாணவர்களுக்கான தேர்வை சந்திப்பது எப்படி? என்பது குறித்த ஆலோசனை, பகல் 11.00 மணி முதல் 1 மணி வரை
(How to face 10th & 12th Public Examination? (11am - 1pm)

11.02.2017 லூர்து அன்னை திருவிழா மாலை 6.30 மணிக்கு சிறப்பு திருப்பலி
(St. Lourdu's Feast 6.30 pm Special Mass)

## வாசகர் விமர்சனம்

5ஆம் தேதி நடந்த சிறப்பு நவநாள் ஆராதனை, மறையுரை, அபிஷேக விழா அனைத்தும் சிறப்பாக இருந்தது. மேலும் வேறு பங்கைச் சார்ந்த பக்தர்களுக்கு காலண்டர்கள் இலவசமாக கொடுத்தது மகிழ்ச்சிக்குரியது. ஆனால் அவர்களிடமிருந்து ரூ. 10/- நன்கொடையாக வசூலித்திருக்கலாம். ஆனால் இதில் உங்கள் பெருந்தன்மை விளங்கியது. மேலும் நம்பிக்கை சுடர் பத்திரிகைக்கும் ரூ. 5/- வசூலிக்கலாம். இலவசமாக கொடுத்ததும் பாராட்டுக்குரியது. ஆக மொத்தத்தில் அனைத்து நிகழ்வுகளும் பாராட்டுவதற்குரியதாகவே உள்ளது. வாழ்த்துக்கள்.

**A. Eugin Francis,**
Velachery - 42, Mob: 9003046956

## நம்பிக்கை வியாழன்

சாட்சி.1

**இபேர்,** புதுச்சேரி : 0413 - 2276025, 2273859
நான் ஜிப்மெர் மருத்துவமனையிலும் மற்றும் புதுச்சேரி நல்வழித்துறையிலும் ஓவியராகப் பணிபுரிகிறேன். எனக்கு சிறுநீரகப் பிரச்சனை காரணமாக எனது இரு சிறுநீரகங்களும் சரிவர வேலை செய்ய வில்லை. அந்த தருணத்தில் என் மகளின் மூலமாக வாணுவம்பேட்டையில் உள்ள புனித யூதா ததேயு ஆலயத்தைப் பற்றித் தெரிந்துக் கொண்டு புனிதரிடம் என் உடல் நோயிலிருந்து முற்றிலும் குணமடைய மன்றாடினேன். அவரது அருளால் எனக்கு நல்லச் சிகிச்சையும் பரிபூரணக் குணமும் கிடைத்தது. நான் இப்பொழுது மிகவும் ஆரோக்கியமாக இருக்கிறேன். நான் இதை என் சாட்சியமாக வெளியிடுவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

மறைக்கல்வி சிட்டுகளுக்கு மட்டும்

# Colouring

*Hello,*

*Idea behind this pic is to make the children understand the powers of new covenant which Christ Jesus given us all to conquer this world......& not to fear of this world....*




**பதில் அனுப்ப வேண்டிய கடைசி நாள்: 15.02.2017**

**As in 2 Chronicles 20:17, God will fight your battle in 2017.**

## இம்மாதம் ஞாயிறு திருப்பலிகளை சிறப்பிப்பவர்கள்:

05.02.2017 ஆண்டின் பொதுக்காலம் 5-ஆம் ஞாயிறு
வாசகங்கள்:
முதல் வாசகம்: எசாயா 58:7-10
இரண்டாம் வாசகம்: 1 கொரி 2:1-5
நற்செய்தி வாசகம்: மத்தேயு 5:13-16
சிறப்பிப்போர்: **புனித யூதா ததேயு அன்பியம்**

12.02.2017 ஆண்டின் பொதுக்காலம் 6-ஆம் ஞாயிறு
வாசகங்கள்:
முதல் வாசகம் : சீராஞானம் 15:15-20
இரண்டாம் வாசகம்: 1 கொரி 2:6-10
நற்செய்தி வாசகம்: மத்தேயு 5:17-37
சிறப்பிப்போர் : **புனித மத்தேயு அன்பியம்**

19.02.2017 ஆண்டின் பொதுக்காலம் 7-ஆம் ஞாயிறு
வாசகங்கள்:
முதல் வாசகம்: லேவி 19: 1-2, 17-18
இரண்டாம் வாசகம் : 1 கொரி 3:16-23
நற்செய்தி வாசகம்: மத்தேயு 5:38 - 48
சிறப்பிப்போர் : **புனித சீமோன் அன்பியம்**

26.02.2017 ஆண்டின் பொதுக்காலம் 8-ஆம் ஞாயிறு
வாசகங்கள்:
முதல் வாசகம் : எசாயா 49: 14- 15
இரண்டாம் வாசகம் : 1 கொரி 4: 1-5
நற்செய்தி வாசகம் : மத்தேயு 6:24-34
சிறப்பிப்போர்: **புனித யாகப்பர் அன்பியம்**

---

**நம்பிக்கை வியாழன்**

## Witness 2



Hi
I am Rajasekar from Madurai,my second daughter Joselin mona (1 year old),affected by liver cancer on sep 2015,six cycle chemo and surgery was done in CMC hospital in vellore. Now she is completely alright and the treatment also finished without any problem. Thanks to St.Jude to recover my daughter, Thanks to Rev. Fr. Michael Suresh and thanks to church members for your prayers for Joselin Mona.

# இம்மாத புனிதர்கள்

| | |
|---|---|
| 02.02.2017 | ஆண்டவரை காணிக்கையாக அர்ப்பணித்தல் - விழா (Jesus Offering Feast) |
| 03.02.2017 | புனித பினாசியு- ஆயர் மறைச்சாட்சி, புனித ஆஸ்காரியு-ஆயர் (St. Pinasiyu. St.Oscar Day) |
| 04.02.2017 | புனித ஜான் தெ பிரிட்டொ(அருளானந்தர்) - அருட் பணியாளர் மறைசாட்சி (St. John De Britto) |
| 05.02.2017 | பகல் 11.00 மணிக்கு ஆங்கிலத்தில் சிறப்பு நவநாள் செபம், நற்கருணை வழிபாடு, திருப்பலி (11.A.M. English Novena Prayer, Benediction, Holy Mass) |
| 06.02.2017 | புனிதர்கள் அருட்பணியாளர் பவுல் மீகி, தோழர்கள், மறைசாட்சிகள் (St. Paul Meigi) |
| 07.02.2017 | புனித கொன்சாலோகார்சியா - மறைசாட்சி (St. Console Carsiya) |
| 08.02.2017 | புனித எரோனிமுஸ் எமிலியன், புனித ஜோஸ்பின் பக்கீத்தா-கன்னி (St.Eronimouse Emiliyan, St. Josephine Bequeath) |
| 10.02.2017 | புனித ஸ்கொலஸ்திக்கா-கன்னி (நினைவு) (St. Scolasthika memory) |
| 11.02.2017 | தூய லூர்து அன்னை ( St. Lourdes) |
| 14.02.2017 | புனிதர்கள் சிரில்-துறவி, மெதோடியு-ஆயர் (St.Cyril, Methodius) |
| 18.02.2017 | புனித குரியகோஸ் எலியாஸ் சவரா-அருட்பணியாளர் St. Curiyagose Elias Savera |
| 21.02.2017 | புனித பீட்டர் தமியான்-ஆயர் மறைவல்லுநர் (St. Peter Damiyan) |
| 22.02.2017 | திருத்தூதர் பேதுருவின் தலைமைப்பீடம் (விழா) Apostle Peter Square Feast |
| 23.02.2017 | புனித பொலிக்காப்பு-ஆயர் மறைசாட்சி நினைவு (St. Policorpes) |

**As in 1 Samuel 20:17, You will experience true love of God in the year 2017.**

**As in 2 Samuel 20:17, You will hear God speak to you and give you direction in 2017.**

## Siddha Medical Camp





## Pongal Celebration - 2017





## Support for Jallikattu & Protest against Peta





## Republic Day Celebration





## Advertisement



Like https://www.facebook.com/st.judesShrineVanuvampet/

http://www.st-judesshrine.com/